REPORTING SECTION

1979 ஏப்ரல் 27]

(7) கவன ஈர்ப்புகள்

அ. புதுக் கல்லூரி மாணவர்களுக்கும், சமூக விரோத கும்பலுக்கும் நடந்த மோதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, நா. சுந்தரராஜ், ஜே. ஜேம்ஸ், சென்னை மு.அரங்கநாதன், எஸ். ஜே. சாதிக்பாட்சா, ப. பொன்னுரங்கம். ஆ, நடராசன், சோ, அழகர்சாமி, கூத்தகுடி ச. சண்முகம், பொ. உத்திராபதி, செ. சிவசாமி, மு, அம்பிகாபதி ஆகியோர் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு நா. சுந்தரராஜ்,

திரு நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே நான் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம வாய்ந்த விஷயத்தை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

"சென்னை இராயப்பேட்டை புதுக்கல்லூரி மாணவர்களுக்கும், சமூக விரோதக் கும்பலுக்கும் சமீபத்தில் நடந்த மோதலினால் மாணவர்கள் காயமடைந்தது பற்றியும், கல்லூரி சொத்துக்கள் சேதமுற்றது பற்றியும்"

மாண்புமிகு திரு ச, இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இராயப்பேட்டை புதுக் கல்லூரிக்கு எதிரில் உள்ள ஹால்ஸ் கார்டனைச் சேர்ந்த சில சமூக விரோதிகள் கல்லூரியின் காம்பௌண்டிற்குள் கஞ்சா புகைத்ததை அங்கே இருந்த மாணவர்கள் ஆட்சேபித்ததைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்களுக்கும், அந்தச் சமூக விரோதிகளுக்கும் இடையே சண்டை ஏற்பட்டு அங்கே கல்லூரியில் ஒரு கலவரம் நடப்பதாக 20-3-1979 அன்று மதியம் 3-30 மணிக்கு தகவல் கிடைத்தவுடன் ராயப்பேட்டை

[திரு. ச. இராமச்சந்திரன்] [1799 ஏப்ரல் 27

காவல் நிலைய ஆய்வாளர் ஒருவர் ஒரு கோஷ்டியுடன் ஸ்தலத்திற்கு விரைந்தார், அந்தச் சமூக விரோதிகள் கல்லூரியை நோக்கி கற்களை எறிந்த நேரத்தில். மாணவர்கள் திரளாகத் திரண்டு அவர்களைத் துரத்தி திருப்பித் தாக்க, பீட்டர்ஸ் ரோட்டில், இருதரப்பினரிடமிருந்தும் கற்கள் சரளமாக வீசப்பட்டன, போலீசாரின் அடுத்தடுத்த எச்சரிக்கையும், சமாதான முயற்சியும், பலனளிக்காத காரணத்தால், அவ்விடத்திற்கு வந்த சைதாப் பேட்டை காவல்துறை உதவி ஆணையாளர் அவர்கள், இருதரப்பினர் மத்தியில் மேலும் கிளர்ச்சி வலுக்காமல் இருக்கவும், சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படாமல் இருக்கவும், கண்ணீர்ப்புகை குண்டுகள் வெடிக்குமாறு உத்தரவிட்டார். அது உடனே பலன் அளித்து, கூட்டம் கலைந்து நிலைமை கட்டுக்கு கொண்டு வரப்பட்டது, ஈ-2. ராயப்பேட்டை காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது, இதன் தொடர்பாக 14 பேர்கள் கைது செய்யப்பட்டனர்,

2. இந்தச் சமூக விரோதிகள் புதுக் கல்லூரியில் நுழைந்து கற்களை எறிந்து, மணி (3-வது ஆண்டு பி, எஸ், சி,) என்ற மாணவருக்கு காயத்தை உண்டாக்கிவிட்டு, ஒரு சைக்கிளையும் திருடிச் சென்றுவிட்டதாக, புதுக் கல்லூரி மாணவர் தலைவர் திரு. சிவகுமார் ஒரு புகாரை, கொடுத்தார், அதன்படி ஈ-2 ராயப் பேட்டை. காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது, காயம் பட்ட மாணவர் மணி, ராயப்பேட்டை மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டதில், அவர் அங்கு புற நோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற்றார், இது சம்பந்தமாக ஹால்ஸ் கார்டனைச் சேர்ந்த நந்தகுமாரும் மற்ற இருவரும் கைது செய்யப்பட்டனர், கல்லூரியைச் சுற்றியும், உள்ளேயும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது, நகர காவல் ஆணையாளரும், காவல்துறை ஆணையாளர் சட்டமும் ஒழுங்கும் (தெற்கு சரகம்) அவர்களும் ஸ்தலத்திற்கு விஜயம் செய்து தக்க ஏற்பாடுகளைச் செய்தனர். நிலைமை அமைதியாக இருக்கிறது,

[முற்பகல் 10-20]

ஆ. மின்சாரம் வழங்காததால் திருநெல்வேலி மாவட்டத்தில் வெற்றிலைப் பயிர் வாடுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் இரா. அமிர்தராஜ், யா.சை.மு. யூசுப் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு மின்சாரத்